1970 செப்டம்பர் 5] [திரு. க. இராமமூர்த்தி]

ஆசைப்படுகிறேன். இந்த மெகானிகல் பிராசஸ் மூலமாக ஒன்று சேர்ப்பவர்களுக்கும், கெமிகல் பிராசஸ் மூலமாக அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்ற நிலையில் இருப்பவர்களுக்கும் ஒரு வேறுபாடு காட்டி இருக்கிறது என்ற நிலையை நம்மால் மறுக்க முடியவில்லை. தலைமை நீதி மன்றம் இந்த வாதத்தை ஒப்புக் கொள்ளவில்லை. இதை நாம் மீண்டும் வலியுறுத்தி இருக்கிறோம். இது நல்லதல்ல. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே இந்த மசோதாவைக் கொண்டுவரத் தேவையில்லை என்று சொல்லி இந்த மசோதாவை கை விடுமாறு அமைச்சரவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மீண்டும் நான் வலியுறுத்துகிறேன். உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை. அரசாங்கத்தின் சட்டத்தின் மீதுதான் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அரசாங்கத்தின் நோக்கத்தைப் பற்றித்தான் ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டு விளக்கம் சொல்லி இருக்கிறோம். ஆகவே திருத்தத்தை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, மசோதாவை நிறைவேற்றவேண்டும், என கூறிக்கொள்கிறேன்.

திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு என் 2, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு என் 3, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "இம்மசோதா நிறை வேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

அவை அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. THIRU M. KARUNANIDHI : Sir, under rule 21(3) Sir, I move that item (10) be taken up after item (5) under Government Bills.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.